**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண்: 220/மா/2024**

**நாள்: 17.03.2025**

| | | |
|---|---|---|
| திரு. ரா. மணிகண்டன்<br>கரூர் | .......... | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்<br>சேலம் மாநகராட்சி<br>சேலம் | ........... | எதிர்மனுதாரர் |

கரூர், தாந்தோன்றிமலை (PO), 9–1/1, பொன்நகர் என்கிற முகவரியில் வசிக்கும் திரு.ரா.மணிகண்டன் என்பவரின் 29.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.11.2024 அன்று பெறப்பட்டு 220/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

கரூர், தாந்தோன்றிமலை (PO), 9–1/1, பொன்நகர் என்கிற முகவரியில் வசிக்கும் திரு.ரா.மணிகண்டன் என்பவர் தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

“நான் கடந்த 10.10.2024 அன்று சேலம் புதிய பேருந்து நிலையத்திற்கு சென்றிருந்தேன். அப்போது, சிறுநீர் உபாதையை போக்க, அங்குள்ள கட்டண கழிவறையை உபயோகம் செய்ய சென்றிருந்தேன். அங்குள்ள ஊழியர் ரூ.10/– (பத்து ரூபாய்) தந்தால் தான் கழிவறையை உபயோகிக்க இயலும் என கூறினார். அந்த ஊழியரிடம், “நான் சிறுநீர் கழிக்க ரூ.10/–ஐ தயாராக உள்ளேன். ஆனால், அதற்கான கட்டணப் பட்டியல் மற்றும் நான் செலுத்தும் ரூ.10/– ரூபாய்க்கான ஆதாரம் எனக்கு வழங்க வேண்டும் என கூறினேன். அதற்கு அந்த ஊழியர் “நான் எவ்வித கட்டண பட்டியலும் மற்றும் நீ செலுத்தும் ரூ.10/–க்கான ரசீதும் வழங்க இயலாது என்றும் நீ எங்கு வேண்டுமானாலும் சென்று, புகார் செய்து கொள் என்றும், சேலம் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள ஊழியர்கள், நீ கொடுக்கும் புகாரை செயல்படுத்தமாட்டார்கள் என்றும் கூறினார்.” இதன் மூலம் முறைகேடாக பெறப்படும் பொதுமக்கள் பணம், லஞ்சமாக மாநகராட்சி ஊழியர்கள் மற்றும் கவுன்சிலர்கள் வரை செல்கிறது என உறுதியாகி உள்ளது.

மேற்சொன்ன புகார்கள் மீது நடவடிக்கை எடுக்க, சேலம் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு கடந்த 10.10.2024 அன்று, CM இணைய வழி புகார் மனு அளித்தேன். எனது புகாரின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற

நடுவத்தில் முறையீடு செய்யப்படும் என தெளிவாக அந்த புகார் மனுவில் குறிப்பிட்டு இருந்தேன். ஆனால், நான் குறிப்பிட்ட புகாரின் மீது நடவடிக்கை எடுக்காமல், எனது புகார் மனுவினை திசை திருப்ப, தவறான தகவல்களை குறிப்பிட்டு, என் புகார் மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக, இணையவழியில் பதில் மனு, சேலம் மாநகராட்சி சூரமங்கலம் உதவி ஆணையர் அவர்கள் அளித்துள்ளார். இதனால், நான், இணைய வழியில் Salem Regional Director of Municipal Administration அவர்களுக்கு, மேல்முறையீட்டு புகார் மனு அளித்தேன். ஆனால், Salem Regional Director அவர்கள், எனது புகார் மேல்முறையீட்டு மனுவினை விசாரணை செய்யாமல் "இம்மனுவானது சேலம் மாநகராட்சிக்கு தொடர்புடையது. எனவே, சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தின் கட்டுப்பாட்டிற்குள் வராது" என பதில் மனுவினை வழங்கி, எனது மனுவினை "Reject" செய்துள்ளார்.

உயர் அதிகாரியான Salem Regional Director அவர்கள், பொதுமக்கள் கொடுக்கும் புகார் மனு மீது விசாரணை செய்து, உண்மை என தெரிய வந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்காமல், தனது உயர் பதவியின் செயல்பாடுகளையும், மாண்புகளையும் செயல்படுத்த தவறிவிட்டார். பொதுமக்கள் வரிப்பணத்தில் ஊதியம் பெறும், உயர் அரசு அதிகாரி, பொதுமக்கள் கொடுக்கும் புகார் மனு மீது, உண்மை தன்மை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க தவறிவிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவத்தில் புகார் அளிக்கப்படும் என எனது புகார் மனுவில் குறிப்பிட்ட போதிலும், சேலம் மாநகராட்சி ஆணையர் மற்றும் Salem Regional Director அவர்கள் என் மனு மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால், சதாரண படிப்பறிவு, பொது அறிவு இல்லாத பொதுமக்கள், கட்டண கழிப்பிடம் என்ற பெயரில் ரசீது இல்லாமலும், கட்டண விபரம் இல்லாமலும் வழங்கும், ரூ.10/– (சிறுநீர்) ரூ.20/– (கழிப்பறை) ஆகிய பணம், மாநகராட்சி அதிகாரிகள் கண்டு கொள்ளாமல் இருக்க, இலஞ்சமாக வழங்கப்படுகிறது.

எனது புகார் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்த, சேலம் மாநகராட்சி ஆணையர் மற்றும் Salem Regional Director of Municipal Administration ஆகியோர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், அனைத்து பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி பகுதிகளில் செயல்படும் கட்டண கழிப்பிடத்தில் கட்டண விபரம் அடங்கிய பெயர் பலகை வைக்க வேண்டும் எனவும், மேலும் பொதுமக்கள் செலுத்தும் தொகைக்கான ரசீது எண், ரசீது தொகை, தேதி ஆகிய அடங்கிய ரசீதுகள் கட்டண கழிப்பிடத்தில் வழங்க உத்திரவிடுமாறும் தெரிவித்துக் கொள்கிறேன்."

**2.** மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ **27.11.2024** நாளிட்ட அறிவிக்கை மூலம் சேலம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

**3.** சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் உதவி ஆணையர் தனது **13.01.2025** மற்றும் **21.02.2025** நாளிட்ட அறிக்கைகளில்:

"சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்பந்தப்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடங்களில் வசூல்

செய்திட 2024–2025ம் வருடத்தில் குத்தகை உரிமம் திரு. எம். சத்தியமூர்த்தி த/பெ மணி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை உரிமம் வழங்கப்பட்டபோது மாநகராட்சி நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் மட்டுமே வசூல் செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. உரிமைதாரர்கள் அந்தந்த உரிமையாணைகளுக்கு விதிக்கப்பட்ட விதிகளின்படி மாநகராட்சியில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை வசூல் செய்யப்பட வேண்டும். அதற்கு அதிகமாக வசூல் செய்யக்கூடாது. அவ்வாறு வசூலிப்பதாக தெரிய வந்தால் உரிமையாணை இரத்து செய்யப்படும் எனவும், நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி புகார் மனு தொடர்பாக இனி, மாநகராட்சி கட்டண கழிப்பகங்களில் மாநகராட்சி நிர்ணயம் செய்த கட்டணங்களை மட்டுமே வசூல் செய்யப்பட வேண்டும்.

மேலும், கட்டணப்பட்டியல் அமைத்து ரசீது வழங்கவும் தெரிவிக்கப்படுகிறது. மீறினால் தங்களது குத்தகை உரிமம் இரத்து செய்யப்படும் எனவும், அறிவிப்பு கிடைத்த 7 தினங்களுக்குள் இதற்குரிய விளக்கத்தினை எழுத்து மூலமாக சமர்ப்பிக்க வேண்டும். தவறும்பட்சத்தில் எவ்வித முகாந்திரமும் இன்றி தங்களது குத்தகை உரிமம் இரத்து செய்யப்படும் என தெரிவித்து சம்பந்தப்பட்ட குத்தகைதாரருக்கு சூரமங்கலம் வார்டு அலுவலக உதவி ஆணையாளரின் 27.12.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்பட்டது.

கட்டண கழிப்பறை குத்தகைதாரர் திரு. சத்தியமூர்த்தி என்பவரின் 06.01.2025 நாளிட்ட விளக்க கடிதத்தில் 16.11.2024 ஆம் தேதி முதல் மேற்கண்ட குத்தகை இனத்தை நடத்தி வருவதாகவும், மாநகராட்சி மூலம் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணங்களை மட்டுமே வசூல் செய்து வருவதாக தெரிவித்துள்ளார். மேலும், கழிப்பகங்களுக்கு வரும் ஒரு சில நபர்கள் அங்கேயே மது அருந்துவது மற்றும் சில தவறான செயல்களுக்கு கழிப்பறையை பயன்படுத்துகிறார்கள். அதனை கேட்டால் குத்தகைதாரர் மீது தவறான புகார்களை தெரிவித்து வருகின்றனர்''என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 25.02.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.02.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 25.02.2025 அன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. மனுதாரருக்கு பதிவு தபாலில் அனுப்பப்பட்ட அழைப்பாணை "Address Left" என்ற அஞ்சல் குறியீட்டுடன் திரும்ப பெறப்பட்டது.

6. சேலம் மாநகராட்சி துப்புரவு ஆய்வாளர் 25.02.2025 அன்றைய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பகங்களில் வசூல் செய்திட 2024-2025ஆம் வருடாந்திர குத்தகை உரிமம் திரு எம். சத்திய மூர்த்தி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை உரிமம் வழங்கப்பட்டபோது மாநகராட்சி நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் மட்டுமே வசூல் செய்யப்படவேண்டும் என்றும், உரிமைதாரர்கள் அந்தந்த உரிமையாணைகளுக்கு விதிக்கப்பட்ட விதிகளின்படி மாநகராட்சியில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை வசூல் செய்யப்படவேண்டும் என்றும், கட்டண ரசீது வழங்கப்பட வேண்டும், அதிகமாக வசூல் செய்யக்கூடாது என்றும் அவ்வாறு தெரியவந்தால் உரிமையாணை இரத்து செய்யப்படும் எனவும் நிபந்தனைகளில்

குறிப்பிடப்பட்டுள்ளது. கழிப்பறையை பயன்படுத்தும் சிலர் தவறான செயல்களில் ஈடுபடும்போது அது பற்றி கேட்டால் குத்தகைதாரர்கள் மீது புகார் தெரிவிப்பதாக குத்தகைதாரர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் குத்தகைதாரரால் கழிவறை பயன்படுத்துவோருக்கு மாநகராட்சியால் நிர்ணயக்கப்பட்ட கட்டணம் மட்டும் வசூலிக்கப்பட்டு உரிய ரசீது வழங்கப்பட்டு வருகிறது என்றும் மேற்கண்ட கழிவறையின் முகப்பு பகுதியில் கட்டண விவரங்கள் அடங்கிய பட்டியல் பலகை வைக்கப்பட்டுள்ளது என்று இம்முறைமன்ற நடுவர் முன்பு பணியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான புகைப்பட ஆதாரங்கள் இம்முறைமன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கிறேன். மேலும் சேலம் மத்திய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கழிவறை சேலம் மாநகராட்சி அலுவலர்களால் அவ்வப்போது திடீர் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது என்றும் வருங்காலங்களில் இந்த திடீர் ஆய்வு தொடர்ந்து நடத்தப்படும் என்றும் இம்முறைமன்ற நடுவர் முன் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் ” என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் சேலம் மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் துப்புரவு ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர், சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்பந்தப்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பகங்களில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட அதிகப்படியாக கட்டணங்கள் வசூல் செய்யப்படுவதாக புகார் மனுவில் குறிப்பிட்டு, அது குறித்து சேலம் மாநகராட்சி ஆணையர் மற்றும் Salem Regional Director ஆகியோருக்கு மனுக்கள் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், கட்டண கழிப்பிடம் என்ற பெயரில் ரசீது இல்லாமலும், கட்டண விபரம் இல்லாமலும் வழங்கும், ரூ.10/– (சிறுநீர்), ரூ.20/– (கழிப்பறை) ஆகிய பணம், மாநகராட்சி அதிகாரிகள் கண்டு கொள்ளாமல் இருக்க, இலஞ்சமாக வழங்கப்படுகிறது எனவும், புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்த, சேலம் மாநகராட்சி ஆணையர் மற்றும் Salem Regional Director of Municipal Administration ஆகியோர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும், மேலும், அனைத்து பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி பகுதிகளில் செயல்படும் கட்டண கழிப்பிடத்தில் கட்டண விபரம் அடங்கிய பெயர் பலகை வைக்க வேண்டும் எனவும், மேலும் பொதுமக்கள் செலுத்தும் தொகைக்கான ரசீது எண், ரசீது தொகை, தேதி ஆகிய அடங்கிய ரசீதுகள் கட்டண கழிப்பிடத்தில் வழங்க உத்திரவிடமாறும் கோரியுள்ளார்.

சேலம் மாநகராட்சி மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறையை குத்தகைதாரர் திரு. சத்தியமூர்த்தி என்பவர் 16.11.2024 ஆம் தேதி முதல் நடத்தி வருவதாகவும், மாநகராட்சி மூலம் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணங்களை மட்டுமே வசூல் செய்து வருவதாகவும், கழிப்பகங்களுக்கு வரும் ஒரு சில நபர்கள் அங்கேயே மது அருந்துவது மற்றும் சில தவறான செயல்களுக்கு கழிப்பறையை பயன்படுத்துகிறார்கள் எனவும், அதனை கேட்டால் குத்தகைதாரர் மீது தவறான புகார்களை தெரிவித்து வருகின்றனர் என்பதும், இருப்பினும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சூரமங்கலம் வார்டு அலுவலகம் சம்பந்தப்பட்ட புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பகத்தில் தற்போது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டணப்பட்டியல் அமைத்து ரசீது வழங்கப்பட்டு வருகிறது எனவும், சேலம் மாநகராட்சி அலுவலர்களால் அவ்வப்போது திடீர் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது என்றும், வருங்காலங்களில் இந்த திடீர் ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதும் சேலம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் துப்புரவு ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

சேலம் மாநகராட்சியில் அமைந்துள்ள கட்டண கழிப்பிடங்களுக்கு ஒப்பந்த ஆணை வழங்கிய பின், சேலம் மாநகராட்சியின் கடமை முடிந்ததாக கருதாமல் கட்டண கழிப்பிடங்களில் எழும் புகார் மூலம் மாநகராட்சியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் என்பதனை மனதில் கொண்டு, அக்கட்டண கழிப்பிடங்களை முறையாக ஆய்வு செய்யுமாறு சேலம் மாநகராட்சி உதவி ஆணையாளர்களுக்கு அறிவுரை வழங்குமாறு சேலம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

இந்நேர்வில், சேலம் மாநகராட்சியில் கட்டண கழிப்பகங்களில் குத்தகைதாரர் அதிக பணம் வசூலிப்பதாக வந்த புகார் மனு தொடர்பாக, துறை ரீதியாய் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சூரமங்கலம் வார்டு அலுவலகம் சம்பந்தமாக புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பகத்தில் தற்போது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டணப்பட்டியல் அமைத்து ரசீது வழங்கப்பட்டு வருகிறது என சேலம் மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் துப்புரவு ஆய்வாளரின் வாக்குமூலம் வாயிலாக தெரிவித்த போதிலும் மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள கட்டண கழிப்பிடம் உட்பட சூரமங்கலத்தில் அமைந்துள்ள பிற கட்டண கழிப்பிடங்களில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படுகிறதா கழிப்பிடம் சுகாதாரமாகவும், சுத்தமாகவும் பராமரிக்கப்படுகிறதா என்பதை அறிய திடீர் ஆய்வு மேற்கொண்டு, அதனடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு உதவி ஆணையருக்கு உத்திரவிடுமாறு, சேலம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு மார்ச் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. ரா. மணிகண்டன்,
9–1/1, பொன்நகர்,
தாந்தோன்றிமலை (PO),
கரூர்–639 005.

2) ஆணையர்,
சேலம் மாநகராட்சி,
கோட்டை பிரதான ரோடு,
சேலம்–636 001.

3) உதவி ஆணையர்,
சேலம் மாநகராட்சி,
சூரமங்கலம் வார்டு அலுவலகம்,
சேலம்–636 005.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

18/3/25

செயலாளர்.

18/3/25